## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 120 /2022**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சேட்டு | தொழில் | : ஊராட்சிமன்ற தலைவர் |
| தந்தை பெயர் | : முத்தலிப்புராயர் | சமயம் | : |
| கிராமம் | : துரிஞ்சபுலி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 61 |

தேதி 11.10.2023

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. அசோக்குமார் Gr.1 - 2511 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் துரிஞ்சிபூண்டி கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவராக உள்ளளேன். அ.சா.1 சங்கர் பொற்குணம் கிராமத்தை சேர்ந்தவர்.

2. சிங்கவரம் ஏரியை 2022 ம் வருடத்தில் ஏலம் எடுத்திருந்தேன். அந்த ஏரிக் காவலுக்காக சங்கர் என்பவரை நியமித்து இருந்தேன். 30 ம் தேதி 4 மணி அளவில் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மேற்படி ஏரியில் ஒரு குட்டை இருந்திருக்கிறது. மீன் பிடித்துவிட்டு அந்த குட்டையில் சங்கர் இருந்துள்ளார். அப்போது எதிரி முருகன் குடிபோதையில் அங்குயிருந்த கடப்பாறையை எடுத்து சங்கரின் காலில் குத்தியுள்ளார் . சங்கரின் கால் இரண்டாக பொளந்து காயம் ஏற்பட்டுள்ளது. இரத்தம் கொட்டியது. சிங்கவரம் ஏழுமலை என்பவர் மாடு மேய்த்து கொண்டியிருந்தபோது ஓடிச்சென்று பார்த்துள்ளார். அப்போது முருகன் அங்கு இருந்து ஓடிவிட்டார். போன் மூலம் தகவல் தெரிந்து நான் வந்து பார்த்தேன். சங்கரின் காலில் கடப்பாறை குத்தியதில் கால் உடைந்து தரையில் படுத்துகிடந்தார். உடனே காரை வரவழைத்து செஞ்சி அரசு மருத்துவமணைக்-கு நான் அழைத்து சென்றேன். செஞ்சி அரசு மருத்துவமணையில் முடியாது என்று சொன்னதனால் சென்னை ஸ்டான்லி மருத்துவமணைக்கு காரில் நான் அழைத்து சென்றேன். சங்கருக்கு சென்னை

மருத்துவமணையில் சிகிச்சை செய்து காலில் ராடும் வைத்துள்ளார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

3. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.